DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FTC), THENI.

# MCOP. No. 155/2021

Deposition of Witness : PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.சுந்தரம்மாள் | ஜாதி | : | -- |
| கணவர் பெயர் | : | திரு.பெரியசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.12.2024

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**ம.த.கு.வி.:**

கேள்வி : சம்பவத்தை நீங்கள் நேரடியாக பார்க்க வில்லை என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது யார்?

பதில் : என்னுடைய மூத்தமகன் அய்யனார். அவரும் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை.

கேள்வி : விபத்தை நேரடியாக பார்த்த சாட்சிகள் எதுவும் கிடையாது என்றால் ?

பதில் : சரிதான்.

கேள்வி : விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை இயக்கிய ஜெயபிரகாஷ் என்பவரை சாட்சியாக விசாரிக்க தயாரா ?

பதில் : தயார்.

கேள்வி : உங்கள் மகன் வக்கீலாக பணிபுரிந்த காலத்தில் மாதம் ரூ.20,000/-ம் சம்பளம் பெற்றதற்கு எந்த ஆவணமும் இல்லை என்றால் ?

பதில் : சரிதான்.

கேள்வி : உங்கள் மகன் இறக்கும் பொழுது வயது 35 இருக்குமா?

பதில் : இருக்கலாம்.

கேள்வி : உங்கள் மகனுக்கு திருமணம் ஆகி விட்டதா?

பதில் : இல்லை.

கேள்வி : வாகனத்தை இயக்கிய ஜெயபிரகாஷ் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்ல என மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் உள்ளது என்றால் ?

பதில் : எனக்கு தெரியாது.

கேள்வி : உங்கள் மகன் சென்ற வாகனம் உங்கள் மகனுக்கோ அல்லது ஜெயபிரகாஷிற்கோ சொந்தமானது கிடையாது என்றால் ?

பதில் : சரிதான்.

கேள்வி : அந்த வாகன உரிமையாளர் 2 வது எதிர்மனுதாரர் என்றால் ?

பதில் : சரிதான்.

கேள்வி : இந்த விபத்தில் ஈடுபட்ட இருசக்கர வாகனத்திற்கு பாலிசி நிபந்தனை மீறப்பட்டள்ளது என்றால் ?

பதில் : தெரியாது.

கேள்வி : ஆகையால் பாலிசி விதி மீறப்பட்டுள்ளதால் 3ம் எதிர்மனுதாரர் எந்த இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் ?

பதில் : சரியல்ல.

கேள்வி : பல்வேறு தலைப்புகளின் கீழ் கேக்கப்பட்டுள்ள இழப்பீடுகள் கிடைக்க தக்க அல்ல என்றால் ?

பதில் : சரியல்ல.

கேள்வி : இந்த வாகனத்தின் காப்பீடு 3ம் தரப்பினருக்கு மட்டும் பொறுந்த கூடியதால் உங்களுக்கு எந்த பரிகாரமும் 3ம் எதிர்மனுதாரரால் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் ?

பதில் : சரியல்ல.

கேள்வி : நீங்கள் இழப்பீடு கேட்க வேண்டும் என்றால் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராகதான் கேட்க வேண்டும் என்றால் ?

பதில் : சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 16.12.2024 அன்று திங்கட்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

GOPINATHAN S

Digitally signed by GOPINATHAN S
Date: 2024.12.16 19:34:42 +05'30'

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
16.12.2024.